MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 31–03–2022(Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | **31.03.2022 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டம்**<br>முன்னிலை: **திரு.உ.முகமதுயாசின்,** நகர்மன்றத்தலைவர் | |
| 1 | **பொருள் எண்.1**<br>**நகர்மன்ற தலைவரால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br>1. உள்ளாட்சியில் நல்லாட்சி ஏற்படுத்தி கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்களுக்கும் நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் சார்பில் நன்றி தெரிவித்து மன்றத்திற்கு தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.<br>2. மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பென்னிக்குயிக் பேருந்து நிலையத்தின் முன்பு முத்தமிழ் அறிஞர் திரு. டாக்டர்.கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையை அமைப்பதற்கு மன்றத்திற்கு தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.<br>3. “தமிழ் வாழ்க” என நகராட்சி அலுவலகத்தின் மேற்புறத்தில் விளக்குகள் ஒளியூட்டுடன் அமைக்க மன்றத்திற்கு தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. | தீர்மானிக்கப்பட்டது |
| 2 | **மன்றப்பொருள் எண்.2**<br>இந்நகராட்சியில் உள்ள பிரிண்டர்கள் கணினிகள் மற்றும் இணையதள இணைப்புகளை ஆண்டு பராமரிப்பு 31.03.2022 உடன் முடிவடைவதால் அடுத்த ஆண்டிற்கான ஆண்டு பராமரிப்பு 01.04.2022 முதல் 31.03.2023 வரை பராமரிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.160000/– க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>அலுவலகக்குறிப்பு<br>அ) 01.04.2022 முதல் 31.03.2023 வரை ஆண்டு பராமரிப்பு உத்தேச செலவு ரூ.1,60,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்காணும் பணிக்கு விலைப்புள்ளி கோரி பணிமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.589/2022/சி1) | அனுமதிக்கலாம். |

<table>
<tr>
<td>3</td>
<td>

**மன்றப்பொருள் எண்.3**

இந்நகராட்சியில் உள்ள கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் இணையதள இணைப்புகளை ஆண்டு பராமரிப்பு (01.04.2022 முதல் 31.03.2023) மேற்கொள்ள கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<table>
<tr><td>1.</td><td>Welcome systems<br>5, Mannadi Asari Lane,<br>Town Hall road,Madurai.</td><td>Rs.171572/–<br>GST உட்பட</td></tr>
<tr><td>2.</td><td>Green systems<br>149/2A, Narimedu,<br>Madurai 625002.</td><td>Rs.164000/–<br>GST தவிர்த்து</td></tr>
<tr><td>3.</td><td>Sakthi Computers<br>sales & Services<br>161/4, Nagai Kadai Bazaar,<br>Alagarkovil road, Melur</td><td>Rs.154580/–<br>GST உட்பட</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மேலூர் சக்தி கம்ப்யூட்டர் நிறுவனத்திற்கு ஆண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினத்தையும் அனுமதிக்கலாம்.

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>

**மன்றப்பொருள் எண்.4**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு சாலைவரி கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டியுள்ளது.

<table>
<tr><td>வ.எண்.</td><td>வாகன எண்.</td><td>தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>TN59 BZ 9457</td><td>3902</td></tr>
<tr><td>2.</td><td>TN59 BX 9453</td><td>3902</td></tr>
<tr><td>3.</td><td>TN59 BX 1344</td><td>14653</td></tr>
<tr><td>4.</td><td>TN59 BS 9536</td><td>14653</td></tr>
</table>

மேற்கண்ட வானங்களுக்கான சாலைவரியை Online payment மூலம் செலுத்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.40,000/– ற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.363/2022/எச்1)

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 5 | **மன்றப்பொருள் எண்.5**<br>இந்நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் 20 வால்வுகளை வைத்து Pumbing மற்றும் distribution பணிகள் செய்ய பொறியியல்பிரிவில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் தனியார் ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளப்படும் பணி 31.03.2022 அன்றுடன் முடிவடைய உள்ளதாலும், குடிநீர் பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர்,அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளதாலும், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி இவ்வாண்டு விலைவிகிதத்தில் 5 எண்ணம் Turncock 2 எண்ணம் Mazdoor-I class வைத்து பணி செய்ய வேண்டியுள்ளதால் மேற்கொண்ட பணிக்கு 01.04.2022 முதல் 31.12.2022 வரை ஒப்பந்தப்பணி மேற்கொள்ள ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | **மன்றப்பொருள் எண்.6**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள Handpump மற்றும் சிறுமின்விசை மோட்டார் மற்றும் பேனல் போர்டுகளை பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்தகாலம் 31.12.2021 அன்றுடன் முடிவடைய உள்ளது. Outsourcing மூலம் குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள கருத்துரு தயார்செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் விநியோக பணியின் முக்கியத்துவத்தை முன்னிட்டு 01.04.2022 முதல் 31.12.2022 வரை குடிநீர் குழாய்கள் சிறுமின்விசை மோட்டார் மற்றும் பேனல் போர்டுகளை பராமரிக்கம் பணிகள் மேற்கொள்ள ரூ.9.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | **மன்றப்பொருள் எண்.7**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள 300 mm, 200mm 100mm, 90mm, 80mm PUC குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணியின் ஒப்பந்தகாலம் 31.03.2022 அன்றுடன் முடிவடைய உள்ளது. Outsourcing மூலம் குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள கருத்துரு தயார்செது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளதாலும், குடிநீர் விநியோக பணியின் முக்கியத்துவத்தை முன்னிட்டும் 01.04.2022 முதல் 31.12.2022 வரை குடிநீர் குழாய்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.9.80இலட்சம் மதிப்பீடு தயார்செய்யப்பட்டமைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 8 | **மன்றப்பொருள் எண்.8**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் **31.03.2022** வரை பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணிநடைபெற்று வருகிறது. தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகம் மூலம் மேற்கண்ட பணியினை Outsourcing மூலம் ரூ.**13.16**இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணி அத்தியாவசிய பணி என்பதால், நிர்வாக அனுமதி பெறப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரும் வரை தற்போது பணி பார்த்துவரும் Swastick traders நிறுவனத்தையே பணி பார்த்துவரும் அதே ஒப்பநதப்புள்ளி விலைவிகிதத்தில் **01.04.2022** முதல் **31.12.2022** வரை பணிசெய்ய பணியினை நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினம் ரூ.**8.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | **மன்றப்பொருள் எண்.9**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிசெய்ய தேவைப்படும் Electrical Material (Choke, Tubelight etc.) விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தம் **31.03.2022** அன்றுடன் முடிவடைய உள்ளது. தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தயார் செய்து உரிய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது மூன்று மாதங்களுக்கு **01.04.2022** முதல் **31.12.2022** வரை மட்டும் அதே விலைப்புள்ளி விலை விகிதத்தில் ரூ.**8.50** இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள அதே ஒப்பந்தத்தாரருக்கு பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | **மன்றப்பொருள் எண்.10**<br>மேலூர் நகராட்சி சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மைப்பணிகளை மேற்கொள்ள ஜெய்சீரடி சாய் மேன்பவர் நிறுவனத்தின்மூலம் ஒப்பந்தஅடிப்படையில் **40** பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் வருகின்ற **31.03.2022** உடன் முடிவடைகிறது. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு எண்.W.P.No.1086/2019 நடைபெற்று வருவதாலும் , ஒப்பந்தப்புள்ளி கோர இடைக்கால உத்தரவு நிலுவையில் உள்ளதாலும், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளதாலும், மேற்கண்ட நிறுவனத்தினரால் **2020–2021** ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி கேள்வித்தொகை ரூ.**418.90/–** என்ற தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து பணிமேற்கொள்ள ஜெய்சீரடி சாய் மேன்பவர் நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளதின்பேரிலும், இந்நகராட்சி பொதுமக்களின் பொதுசுகாதாரப் பணியின் அவசியம் கருதியும் நிர்வாக செலவினத்தைக் கருத்தில் கொண்டும், **01.04.2022** முதல் **30.06.2022** முடிய உள்ள காலத்திற்கு ஜெய்சீரடி சாய் மேன்பவர் ஏஜென்சிக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விகிதப்படி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 11 | **மன்றப்பொருள் எண்.11**<br>இந்நகராட்சிக்குட்பட்ட சிவன்கோவில் தெரு துவக்கப்பள்ளி மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தினால் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக பள்ளிக்கட்டிடம் கட்டவும் மற்றும் அழகர்கோவில் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் புதிதாக ரூ.400.00 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ள 26.03.2022 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டதின்பேரில் ரூ.500.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அரசு முழுமான்யத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | **மன்றப்பொருள் எண்.12**<br>மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரிசந்தையினை திரு.குப்புராஜ் என்பவர் 2019–2020 முதல் 2021–2022 ம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் குத்தகை எடுத்துள்ளார். அன்னாரின் குத்தகை காலம் 31.03.2022உடன் நிறைவடைகிறது. மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை பழுதடைந்துள்ளதால் அரசு மான்யமாக புதிய தினசரி சந்தை கட்டுவதற்கு அனுமதி வழங்கியதன் அடிப்படையில் மேற்படி கடைகளை அப்புறப்படுத்தி தற்காலிக தினசரி சந்தை அமைத்து மேற்படி சந்தையில் ஏற்கனவே 2021–2022ம் ஆண்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் உரிமம் அனுபவித்து வந்த உரிமததாரர் திரு.எல்.குப்புராஜ் அவர்கள் தனக்கே மேற்படி ஒப்பந்தத்தை நீடித்து வழங்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு W.P.(MD).No. 5302/2022 நாள்.25.03.2022 உத்தரவில் மேற்படி உரிமததாரருக்கு 4வார காலத்திற்குள் உரிமதாரருக்கு உரிய பரிகாரம் வழங்க உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் ஏற்கனவே எடுத்த 2021–2022ம் ஆண்டு ஏலத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து ஆறுமாத காலத்திற்கு உரிமத்தினை நீடித்து வழங்கோரி விண்ணப்பம் செய்துள்ள திரு.எல்.குப்புராஜ் உரிமதாரர் விண்ணப்பத்தின் அடிப்படையில் 6 மாத காலத்திற்கு உரிமத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | முடிவுசெய்யப்பட்டது. |
| 13 | **மன்றப்பொருள் எண்.13**<br>மேலூர் நகராட்சியில் பருவமழை காலங்களில் மழைநீர்தேங்கி சேதமடைந்த காரணத்தினால் கீழ்க்கண்ட பகுதிகளில் குடிநீர் குழாய் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிமேற்கொள்ள மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வேலையின் விபரம் | Unicode | நீளம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | முனியாண்டிகோவில் குறுக்குதெரு, பாபாநகர் 1,2,3,45 வது தெருக்கள், சி.இ.ஒ.ஏ. பள்ளி சாலை குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி. | (UNICODE NO : 116020R127, 116023R142, 116023R143, 116023R144, 116023R145, 116023R146 | **900.00** | 72.00 |
| 2. | சி.இ.ஒ.பள்ளி சாலை, பாண்டியன் நகர் மேற்கு 4வது தெரு, இளங்கோ 1, 2 ,6 வது தெரு, குபேரன் நகர் 1வது ,2,3,4,5வது குறுக்கு தெரு, எஸ்.எம்.நகர் 1வது குறுக்கு தெருக்களில் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி. | (UNICODE NO : 116023R147, 116004S33, 116004S45, 116004R46, 116004S48, 116008S83, 116008S84, 116008S85, 116008S86, 116008S87 , 116016S126) | **1090.00** | **78.00** |
| 3. | வளர் நகர் 2,3,வது தெருக்கள், ஜில்ஜில் நகர் 1வது தெரு, கே.கே.நகர் கிழக்கு 3,4, 5வது தெருக்களில் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி. | (UNICODE NO : 116023S149, 116023S150, 116024S157, 116027R181, 116027S173, 116027S174 ) | **990.00** | **62.00** |
| 4. | சத்யா நகர் 1வது, 3வது தெரு, சிலோன்காலனி தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி. | ( UNICODE: 116026R177, 116026R179, 116011R75 ) | **555.00** | **76.00** |
| | | மொத்தம் | | **288** |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளஅரசு முழுமான்யத்துடன் நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை நகராாட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம். | |
| 14 | **மன்றப்பொருள் எண்.14**<br><br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.233/10 வார்டு ஏ, பிளாக் 29, சந்தைபேட்டையில் அமைந்துள்ள வாரச்சந்தை வளாகத்தில் நிரந்தர கட்டிடம் இல்லாமல் கழிவுநீர் கால்வாய், சந்தைமேடை ஆகியவை இல்லாமல் வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் போதிய வசதியில்லாமல் உள்ளது. எனவே மேற்கண்ட வாரச்சந்தையில் சந்தை வளாகம் அமைக்க 26.03.2022 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்பேரில் ரூ.500.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அரசு முழுமான்யத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | **மன்றப்பொருள் எண்.15**<br><br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.233/5, பெரியகருப்பன் காலனியில் அமைந்துள்ள தூய்மைப்பணியாளர் குடியிருப்பு மிகவும் சிதிலமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட குடியிருப்பை முழுமையாக இடித்து அப்புறப்படுத்தி புதிய தூய்மைப்பணியாளர் குடியிருப்பு கட்ட 26.03.2022 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்டத்தில் இந்நகராட்சி தூய்மைப்பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டிடம் கட்ட கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்பேரில் ரூ.500.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு அரசு முழுமான்யத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 16 | **மன்றப்பொருள் எண்.16**<br>மேலூர் நகராட்சி அலுவலகத்தில் தற்பொழுதுள்ள கட்டமைப்புகளில் நகர்மன்ற அரங்கம், நகர்மன்றத்தலைவர் அறை, வருவாய்பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு என தனிஅறை வசதிகள் இல்லை. மேலும் அலுவலகத்தை சுற்றி பாதுகாப்பு சுவர் மற்றும் மழைக்காலங்களில் மழை வெள்ள நீர் தேங்கி வெளியேறாமல் உள்ளது. இதனை தவிர்க்கும்பொருட்டு இந்நகராட்சி அலுவலகத்தை சுற்றி மேம்பாட்டு பணிகள் செய்யவும் முதல்தளத்தில் மேற்கண்ட பிரிவுகளுக்கு அலுவலகப்பணிகள் செய்வதில் சுணக்கம் ஏற்படுகிறது. மேலும் 26.03.2022 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி அலுவலக முதல்தள கட்டிடம் கட்ட கோரிக்கை வைக்கப்பட்டதின்பேரில் அலுவலகத்தின் முதல்தளம் கட்டிடம் கட்ட ரூ.500.00இலட்சத்தில் தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அரசு முழுமான்யத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | **மன்றப்பொருள் எண்.17**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.2/3ஏ, பேருந்துநிலையம் 1972ல் கட்டப்பட்டது. தற்சமயம் மேலூர் நகர் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில் தற்போதுள்ள கட்டிடங்கள், கடைகள், கழிப்பறைக்கட்டிடங்கள், உள்கட்டமைப்புகள் அனைத்தும் சேதமடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது. மேற்கண்ட குறைபாட்டினை நிவர்த்திசெய்ய வட்டார போக்குவரத்து துறை அலுவலர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையின் அடிப்படையில் மேலூர் நகராட்சி பகுதியை சுற்றி 84 கிராம மக்கள் மற்றும் திருச்சி, தஞ்சாவூர், காரைக்குடி, சென்னை செல்லும் பேருந்துகள் அனைத்தும் மேலூர் பேருந்துநிலையத்திற்கு வந்துசெல்கின்றன. 26.03.2022 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்டத்தில் மேற்கண்ட பேருந்துநிலையத்தினை மேம்பாடு செய்ய கோரிக்கை வைக்கப்பட்டதின்பேரில் மேலூர் நகராட்சி பேருந்து நிலையத்தினை மேம்பாடு மற்றும் மறுகட்டமைப்பு செய்ய ரூ.7.00 கோடியில் தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு முழுமான்யத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 18 | **மன்றப்பொருள் எண்.18**<br>மேலூர் நகராட்சியில் பருவமழை காலங்களில் மழைநீர்தேங்கி வெளியேற முடியாமல் பொதுமக்களுக்கு பொதுசுகாதார கேடு ஏற்படுவதாக நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்ததன்பேரில் கீழ்க்கண்ட பகுதிகளில் மழைநீர்வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வேலையின் விபரம் | Unicode | நீளம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு 1 , பல்லவராயன்பட்டி மெயின்ரோடு, ஆசைநகர் மெயின்ரோடு, ஆசை நகர் 1, 2, 3 வது குறுக்குதெருக்கள், ஆசைநகர் மெயின் ரோடு 1, 2 குறுக்குத்தெரு, ஆசை நகர் 1, 2 வது தெரு, ஆசை நகர் வடக்கு மெயின் தெரு, ஆசைநகர் வடக்கு குறுக்குத்தெரு, ஆசைநகர் வடக்கு 1வது குறுக்குத்தெருக்களில் புதிதாக மழைநீர்வடிகால் அமைக்கும் பணி. | 116/001/S16 , 116/001/R13, 116/001/S18, 116/001/S19, 116/001/S20 | 1688 | 135.00 |
| 2. | வார்டு 16, குமார் நகர் மெயின் ரோடு, குமார் நகர் 1, 2, 3, 4,5,6, 7,8,9 வது தெரு, விஷால் நகர் மெயின் ரோடு , குறுக்குத்தெரு மற்றும் விஷால் நகர் 1வது தெரு குறுக்கு தெரு பகுதியில் புதிதாக மழைநீர்வடிகால் அமைக்கும் பணி. | 116/016R94, 116/016/R95, 116/016/R96, 116/016/R97, 116/016/R98, 116/016/R99, 116/016/R100, 116/016/R101, 116/016/R102, 116/016/R103 ,116/016/R106, 116/016/R108 | 1684 | 120.00 |
| 3. | வார்டு 10, சொக்கம்பட்டி மெயின்ரோடு, சின்னப்பயல் ஊரணி மெயின் தெரு, சொக்கம்பட்டி 1, 2,3வது குறுக்குத்தெருக்கள், சின்னப்பயல் ஊரணி 1வது , 2வது குறுக்குத்தெரு, முத்தமிழ் நகர் மெயின்ரோடு, முத்தமிழ்நகர் 1வது , 2வது, 3வது குறுக்குத்தெருக்கள், முத்தமிழ் நகர்1வது , 2வது குறுக்குத்தெருக்கள், முத்தமிழ்நகர் மெயின்தெருக்களில் புதிதாக மழைநீர்வடிகால் அமைக்கும் பணி. | 116/010/R71, 116/010/S94, 116/011/S104, 116/011/S105, 116/011/S106, 116/001/R107, 116/001/R108, 116/001/R09, 116/001/S11 | 2770 | 157.00 |
| 4. | வார்டு 26, சத்யா நகர் 1வது ,2வது தெருக்களில் புதிதாக மழைநீர்வடிகால் | 116/026//R177, 116/026/R178 | 240 | 9.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அமைக்கும் பணி. | | | | | |
| | | 5. | வார்டு 23, பாபா நகர் 1வது, 2வது , 3வது, 4வது, 5வது தெருக்களில், சி.இ.ஒ.ஏ. பள்ளி சாலை பகுதிகளில் புதிதாக மழைநீர்வடிகால் அமைக்கும் பணி. | 116/023/R142, 116/023/R143, 116/023/R144, 116/026/145, 116/026/R146, 116/026/R147 | 920 | 32.00 | | |
| | | 6. | வார்டு 24, கே.கே.நகர் கிழக்கு 3வது, 4வது, 5வது தெருக்களில் புதிதாக மழைநீர்வடிகால் அமைக்கும் பணி. | 116/027/S173, 116/027/S174, 116/027/R180 | 550 | 20.00 | | |
| | | 7. | வார்டு 1, வெங்கடேஷ்வரா நகர் மெயின் ரோடு, வெங்கடேஷ்வரா நகர் 1வது, 2வது, 3வது 4வது குறுக்குத்தெருக்கள், வெங்கடேஷ்வரா நகர் 2வது, 3வது, 4வது மெயின் குறுக்குத்தெருக்கள், வெங்கடேஷ்வரா நகர் வடக்கு மெயின் தெரு, வெங்கடேஷ்வரா நகர் தெற்கு 1வது,2வது, 3வது , 4வது, 5வது குறுக்குத்தெருக்கள், அழகர்கோவில்ரோடு (வெங்கடேஷ் நகர்) 1வது தெருக்களில் புதிதாக மழைநீர்வடிகால் அமைக்கும் பணி. | 116/001/R03, 116/009/R68 | 2346 | 130.00 | | |
| | | 8. | பி.எஸ்.நகரில் மழைநீர்வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும்பணி. | 116/024/R152 | 415 | 24.00 | | |
| | | 9. | ஸ்டார் நகர் மற்றும் இளங்கோ தெருவில் மழைநீர்வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும்பணி. | 116/008/R64, 116/004/S44 | 1136 | 40.00 | | |
| | | 10. | மலம்பட்டியில் மழைநீர்வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும்பணி. | 116/021/R130, 116/021/S136, 116/021/S137, 116/021/S138, 116/021/S139 | 3125 | 170.00 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | வி.எஸ்.நகர் மழைநீர்வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும்பணி. | 116/016/R115, 116/016/R116, 116/016/R117, 116/016/R118, 116/016/R119, 116/016/R120 | 1016 | 67.00 |
| 12. | வெள்ளநாதன்பட்டியில் (இளங்கோ ரோடு) மழைநீர்வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும்பணி. | 116/004S44 | 490 | 47.00 |
| | | மொத்தம் | | 951 |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளஅரசு முழுமான்யத்துடன் நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை நகராாட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.